# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# இரண்டாம் பத்து

## மூன்றாம் திருவாய்மொழி - ஊனில்வாழ்
## ஆழ்வார் பகவத் அனுபவத்தைப் பூர்ணமாகப் பெற்று, உசாத்துணையான நித்யஸூரிகளோடு எப்போது கூடப்போகிறோம் என்று ஆசைப்படுதல்

** ஊனில் வாழ் உயிரே! * நல்லை போ உன்னைப் பெற்று *
வானுளார் பெருமான் * மதுசூதன் என் அம்மான் **
தானும் யானும் எல்லாம் * தன்னுள்ளே கலந்து ஒழிந்தோம் *
தேனும் பாலும் நெய்யும் * கன்னலும் அமுதும் ஒத்தே 1

ஒத்தார் மிக்காரை * இலை ஆய மா மாயா! *
ஒத்தாய் எப்பொருட்கும் உயிராய் ** என்னைப் பெற்ற
அத்தாயாய்த் தந்தையாய் * அறியாதன அறிவித்த *
அத்தா! நீ செய்தன * அடியேன் அறியேனே 2

அறியாக் காலத்துள்ளே * அடிமைக் கண் அன்பு செய்வித்து *
அறியா மா மாயத்து அடியேனை * வைத்தாயால் **
அறியாமைக் குறளாய் * நிலம் மாவலி! மூவடி என்று *
அறியாமை வஞ்சித்தாய் * எனது ஆவி உள் கலந்தே 3

எனதாவி உள் கலந்த * பெரு நல் உதவிக் கைம்மாறு *
எனதாவி தந்து ஒழிந்தேன் * இனி மீள்வது என்பதுண்டே? **
எனதாவி ஆவியும் நீ * பொழில் ஏழும் உண்ட எந்தாய்! *
எனதாவி யார்? யான் ஆர்? * தந்த நீ கொண்டாக்கினையே 4

இனி யார் ஞானங்களால் * எடுக்கல் எழாத எந்தாய் *
கனிவார் வீட்டின்பமே! * என் கடல் படா அமுதே! **
தனியேன் வாழ் முதலே! * பொழில் ஏழும் ஏனம் ஒன்றாய் *
நுனியார் கோட்டில் வைத்தாய் * உன பாதம் சேர்ந்தேனே 5

சேர்ந்தார் தீ வினைகட்கு * அரு நஞ்சைத் திண் மதியை *
தீர்ந்தார் தம் மனத்துப் * பிரியாது அவர் உயிரை **
சோர்ந்தே போகல் கொடாச் சுடரை * அரக்கியை மூக்கு
ஈர்ந்தாயை * அடியேன் அடைந்தேன் * முதல் முன்னமே 6

முன் நல் யாழ் பயில் நூல் * நரம்பின் முதிர் சுவையே! *
பன்னலார் பயிலும் பரனே! * பவித்திரனே! **
கன்னலே! அமுதே! * கார் முகிலே! என் கண்ணா! *
நின் அலால் இலேன் காண் * என்னை நீ குறிக்கொள்ளே 7

குறிக்கொள் ஞானங்களால் * எனை ஊழி செய் தவமும் *
கிறிக் கொண்டு இப்பிறப்பே * சில நாளில் எய்தினன் யான் **
உறிக் கொண்ட வெண்ணெய் பால் * ஒளித்து உண்ணும் அம்மான் பின் *
நெறிக் கொண்ட நெஞ்சனாய்ப் * பிறவித் துயர் கடிந்தே 8

கடி வார் தண்ணந்துழாய்க் * கண்ணன் விண்ணவர் பெருமான் *
படி வானம் இறந்த * பரமன் பவித்திரன் சீர் **
செடியார் நோய்கள் கெடப் * படிந்து குடைந்து ஆடி *
அடியேன் வாய் மடுத்துப் * பருகிக் களித்தேனே 9

களிப்பும் கவர்வும் அற்றுப் * பிறப்புப் பிணி மூப்பு இறப்பு அற்று *
ஒளிக் கொண்ட சோதியமாய் * உடன் கூடுவது என்று கொலோ? **
துளிக்கின்ற வான் இந்நிலம் * சுடர் ஆழி சங்கு ஏந்தி *
அளிக்கின்ற மாயப் பிரான் * அடியார்கள் குழாங்களையே 10

** குழாங்கொள் பேர் அரக்கன் * குலம் வீய முனிந்தவனை *
குழாங்கொள் தென்குருகூர்ச் * சடகோபன் தெரிந்து உரைத்த **
குழாங்கொள் ஆயிரத்துள் * இவை பத்தும் உடன் பாடி *
குழாங்களாய் அடியீருடன் * கூடி நின்று ஆடுமினே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---